(ஆ) பொள்ளாச்சி-வால்பாறை நெடுஞ்சாலையிலுள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் பழுதடைந்துள்ளது குறித்து.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பொள்ளாச்சி-வால்பாறை நெடுஞ்சாலைகளிலுள்ள பாலங்கள் மற்றும் சாலைகள் பழுதடைந்துள்ளது குறித்து'' மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

பொள்ளாச்சி-வால்பாறை சாலையின் மொத்த நீளம் கி.மீ. 0/0-64/0 ஆகும். இச்சாலை நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பிலுள்ள முக்கிய பெரிய மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-24/6 வரையான பகுதி சமதளத்திலும், கி.மீ. 24/6-64/0 வரையான பகுதி வால்பாறை மலைப்பகுதியிலும் செல்கிறது. பொள்ளாச்சியிலிருந்து, வால்பாறை செல்வதற்கு இந்தச் சாலை மட்டும் தான் உள்ளது. 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த புயல் மழையின் போது மேற்படி சாலையில் கி. மீ. 31/2-ல் உள்ள வளைவில் மிகப் பெரிய மண் சரிவு ஏற்பட்டது. மேலும் இச்சாலையில் பல இடங்களில் மண் சரிவும், சாலையில் நொடிகளும் ஏற்பட்டன.

மேற்படி மண் சரிவுகள் போர்க்கால அடிப்படையில் உடனடியாக அகற்றப்பட்டு சாலை அரிப்பு ஏற்பட்ட இடங்களில் தற்காலிகமாக மணல் பைகள் போடப்பட்டு 24 மணி நேரத்திற்குள் சாலைப் போக்குவரத்திற்கு உகந்த வகையில் சீரமைக்கப்பட்டது. மேலும் சாலையில் ஏற்பட்ட நொடிகள் தற்காலிக வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் நொடிகள் போடப்பட்டு சீர் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இச்சாலையில் நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணியாக கி.மீ. 31/2-ல் உள்ள வளைவிற்கு ரூ. 3.00 லட்சம் செலவில் தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

[திரு. எஸ். கண்ணப்பன்] [1993 ஏப்ரல் 20

மேலும் பொள்ளாச்சி-வால்பாறை சாலைகளில் கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு பராமரிப்பின்கீழ் தடுப்புச் சுவர்கள் மற்றும் பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றன.

	தொகை. (ரூபாய்)
1. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி. மீ. 40/6-ல் உள்ள கொண்டை ஊசி வளைவு சீரமைத்தல்.	1,15,000
2. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி. மீ. 31/2-ல் பாதுகாப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000
3. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 32/8-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	85,000
4. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 33/2 ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000
5. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி.மீ. 34/2-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000
6. பொள்ளாச்சி-வால்பாறை சாலை கி. மீ. 34/6-ல் தடுப்புச் சுவர் கட்டுதல்.	2,00,000

மேற்கண்ட பணிகளை விரைந்து முடித்திட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேலும் இச்சாலையில் கி.மீ. 29/8-ல் உள்ள சிறு பாலம் திரும்பக் கட்டுதல் பணி ரூ. 1,65,000 செலவில் சிறப்பு பராமரிப்புப் பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இச்சாலையில் தற்போது லாரி, பஸ் போக்குவரத்து எந்தத் தடையும் இன்றி நடைபெற்று வெள்ளக் காலத்தில் இருந்த பதட்ட நிலை சீர்பட்டு மாமூல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன்: மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிக்கு நான் சட்டமன்ற உறுப்பினராகச் சென்ற

1993 ஏப்ரல் 20] [டாக்டர் அ. ஸ்ரீதரன்]

வுடன், கடந்த 8 ஆண்டுக்காலமாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் பழுதடைந்து, சரி செய்யாமல் இருந்ததைக் கண்டறிந்து, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு தந்தி கொடுத்திருந்தேன். என்னுடைய தந்தியைப் பெற்று, தலைமைப் பொறியாளரை உடனே அங்கே அனுப்பி வைத்து, நானும் அந்தத் தலைமைப் பொறியாளரும் வால்பாறை பகுதியைச் சுற்றிப் பார்த்து, அதன் பிறகு சுமார் 53 இலட்சம் ரூபாயை அந்தச் சாலைகளைச் சரி செய்வதற்காக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தந்தார்கள். அதற்காக இந்த மாமன்றத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும், கடந்த வருடம் பெய்த மழையாலும், புயலாலும், அந்தச் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அங்கே இருக்கிற மலைப் பகுதிகளில் இருப்பவர்கள் காய்கறி, உப்பு வாங்க வேண்டுமென்றால் கூட.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: பொள்ளாச்சி சந்தைக்குத்தான் செல்ல வேண்டுமென்பதால், மாற்றுப் பாதை இல்லாத காரணத்தால், உடனடியாக அங்கே இருக்கக்கூடிய பழுதடைந்த சாலைகளைச் சரி செய்வதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் தனிக் கவனம் எடுத்து, முழு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே விவரங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். புயலால் ஏற்பட்ட சேதங்களையும் விவர அறிக்கையிலே தந்திருக்கிறேன். அது பற்றி விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஆகவே அந்தச் சாலைகளின் பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால், உடனடியாக அங்கே இருக்கின்ற பிரச்சினைகள் களையப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒரு வார காலத்திற்குள் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நல்ல பதிலுக்கு நன்றி இருந்தாலும் அரசினுடைய நிதி நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும். எனவே பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட

அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு வரவழைத்தால், நான் அவர்களைக் கூட்டிச்சென்று காண்பித்து, அங்கே இருக்கும் முக்கிய மான சாலைகளைச் சரி செய்வதற்கு எடுத்துரைக்க எனக்கு வாய்ப்பு இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்து, உடனடியாக அந்தப் பகுதி மக்களின் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் கோட்டப் பொறியாளர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து, அவரும் அந்த அதிகாரியும் சென்று அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்க்க, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப் பகுதிகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென்று அரசின் சார்பிலே அவர்களுக்கு ஆணையிடப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கை இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி).

3. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப் பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் வைத்தல். திரு. என். ஆர். சிவபதி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பில்.

முற்பகல் 10.15

திரு. என். ஆர் சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு சட்டப் பேரவையின் 1992—93 ஆம் ஆண்டுக் கான, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பதினாறாவது, பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத் தொன்பதாவது அறிக்கைகளை, குழுத் தலைவரின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் சட்ட முன் வடிவு (அறிமுகம் செய்தல்) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1993.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS